# கழுகின் சத்தம்

## ஜனவரி 2, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

---

**இயேசுவானவர் எப்பொழுதுமே உங்களுடைய வாசலில் நின்றிருந்து கதவைத் தட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர் போதும் என்று அளவுக்கு தட்டிக் கொண்டிருக்கப்போவதில்லை அவர் போதும் என்ற அளவுக்கு தட்டி முடித்துவிட்டு திரும்பிப் போய்விடும் நேரம் ஒன்று வரும். அப்பொழுது நீங்கள் அவருடைய கதவைத் தட்டுவீர்கள், ஆனால் நீங்கள் ஒரு போதும் அவரை கண்டு கொள்ளவே முடியாது. வருவதற்கான நேரம் இருக்கையில் வந்து விடுங்கள்.**



செய்தி: 60-12-11E
லவோதிக்கேயா சபையின்
காலம், Para 276

# ஆனால் அவனுடைய தகப்பனைக் கூட்டிக்கொண்டு போகும்படி அவர் ஒருபோதும் அவனிடம் சொல்லவேயில்லை, ஆனால் எப்படியும் இவன் அவனைக் கூட்டிக்கொண்டு போனான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 53-0325 இஸ்ரவேலும் சபையும் #1

கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்.

லோத்தும் அவனோடேகூடப் போனான்; ஆபிராம் ஆரானை விட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும்... தங்கள் சம்பத்தெல்லாவற்றையும்... கூட்டிக்கொண்டு...

48. இப்பொழுது கவனியுங்கள், எதைச் செய்யக் கூடாது என்று தேவன் அவனிடம் கூறினாரோ அதை அவன் அங்கே

சரியாகச் செய்தான், அவன் தன்னுடைய மருமகனாகிய லோத்தையும், தன்னுடைய தகப்பனையும் கூட்டிக் கொண்டு போனான்.

ஆனால் அவனுடைய தகப்பனைக் கூட்டிக்கொண்டு போகும்படி அவர் ஒரு போதும் அவனிடம் சொல்லவேயில்லை, ஆனால் எப்படியும் இவன் அவனைக் கூட்டிக்கொண்டு போனான்.

எந்த வேத வாசகரும், உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது, நாளைய தினம் இதை ஆதியாகமத்தில் வாசித்துப் பாருங் கள். அந்த வயதான மனிதன் மரிக்கும் வரையில், பரிமளத்தைலத்திலுள்ள (ointment) ஒரு ஈயாக அது இருந்தது என்பதைக் கவனியுங்கள்.

அவன் வழியெல்லாம் ஒரு இடற்கல் லாகவே இருந்தான், அவ்வண்ணமே

லோத்தும் இருந்தான்; தேவன் ஆபிரகாமை தான் அழைத்தார், லோத்தையல்ல.

அவர் ஆபிரகாமை அழைத்தார், அவனுடைய தகப்பனை அல்ல.

நல்லது, நீங்கள், 'அப்படியானால் சாராளைக் குறித்து என்ன?' என்று கேட்கலாம். ஒரு மனிதனும் அவனுடைய மனைவியும் ஒன்றே. எபேசியரில், 'அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்' என்று வேதாகமம் அவ்வண்ணமே கூறி யுள்ளது. சரி.

49. ஆனால் அவர் ஆபிரகாமை அழைத்து, அவனிடம் கேட்டு, அவன் கொண்டிருந்த எல்லாவற்றிலிருந்தும் அவனை வேறுபிரித்துக்கொண்டு, ஒரு அந்நிய தேசத்துக்குள் போகும்படி அவனிடம் கூறினார். கவனியுங்கள், ஒரு வேறுபிரிதல்! நீங்கள் அதைக் குறித்து

எதையுமே அறிந்திராத ஒரு அந்நிய தேசத்தில் போகுதல், அதுதான் கிறிஸ்தவம்.

உலக காரியங்களிலிருந்து வேறு பிரித்துக்கொள்ளுதல், ஏனென்றால் தேவன் உங்களை அழைத்திருக்கிறார். வேறொரு தேசத்துக்குள் சென்று, நீங்கள் அவர்களைக் குறித்து எதையுமே அறிந்திராத ஜனங்கள் மத்தியில் வாசம் செய்வது, ஒரு பரதேசியாக (pilgrim) இருக்கும்படி. ஆமென்.



**வேதம், “இப்பொழுது நீங்கள் இருக்கின்றதைப் போன்ற, உங்களுடைய சுக ஜீவிய நாட்களில் நீங்கள் என்னை புறக்கணித்துத் தள்ளினால், ஆபத்து வருகின்றபோது, நானும் உங்களைப் பார்த்து நகைப்பேன்” என்று கூறியுள்ளது.**

**எனவே நீங்கள் இன்றிரவே அந்தப் பொட்டலத்தை அலசி ஆராய்ந்து பார்ப்பது மேலானது**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

114. நீங்கள் படுக்கையின் மேல் படுத்து மரித்துக்கொண்டிருக்கும்பொழுது மருத்துவர், “உங்களுக்காக ஒன்றுமே விடப்பட்டிருக்கவில்லை. நீங்கள் ஒரு சில நிமிடங்களில் மரித்து விடுவீர்கள்” என்று கூறுகிறபோது, அப்பொழுது நீங்கள் அந்த பொட்டலத்திற்குள்ளே நோக்கிப் பார்க்க விரும்பு வீர்கள். இன்றிரவே அதற்குள்ளே நோக்கிப் பாருங்கள், ஏனெனில் அப்பொழுது அது உங்க ளிடத்திலிருந்து திருப்பப்படும். வேதம், “இப்பொ ழுது நீங்கள் இருக்கின்றதைப் போன்ற, உங்க ளுடைய சுக ஜீவிய நாட்களில் நீங்கள் என்னை புறக்கணித்துத் தள்ளினால், ஆபத்து வருகின்ற போது, நானும் உங்களைப் பார்த்து நகைப்பேன்” என்று கூறியுள்ளது. எனவே நீங்கள் இன்றிரவே அந்தப் பொட்டலத்தை அலசி ஆராய்ந்து பார்ப்பது மேலானது.

---



---

109. ஆனால் அவர்களில் சிலருக்கு இந்த வெகுமதி என்னவாயிருந்தது என்றும், அதன் உள்ளே என்ன இருந்தது என்பதும் அவர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டிருந்தது. அவர்களில் சிலர் அதற் குள்ளாக நோக்கிப் பார்த்தனர். அந்த கிறிஸ்மஸ் பொட்டலத்திற்குள் முதலில் உற்றுப்பார்த்தவர்கள் யாராயிருந்தனர் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அது தேவதூதர்களாய் இருந்தது என்று நான் விசுவாசிக்கிறேன். தேவ தூதர்கள் அதை அறிந்திருந்தனர். அது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட் டிருந்தது. அவர்கள் அதை அறிந்திருந் தனர். ஏனென்றால் அவர்கள் குன்றின் மீதிருந்து வந்தனர்.

110. ஒருவேளை சிறிய மரியாள் அங்கே களைப்படைந்து புழுதியாய் உட்கார்ந்து கொண்டிருந்திருக்கலாம். ஒரு பரிதாபமான பண்டைய ஆடுமேய்க்கும்

பையன் ஆட்டைப்போல துர்நாற்றம் வீச அருகில் வந்து, ஏதோ ஒன்றை மனதில் கொண்டவனாய் அந்த இரவு அங்கு அமர்ந்திருந்த அந்த சிறு தாயாரைக் கண்டான். இன்றைக்கு ஏதோ ஒன்று சம்பவிக்கப்போவதை ஜனங்கள் காணக் கூடியது போன்றே பயங்கரமான நேரங் களில் ஜனங்கள் எந்த வழியாய் திரும்ப வேண்டும் என்பதை அறிந்து கொள்கிற தில்லை. ஒருக்கால் பண்டைய ஆடு மேய்க்கும் சிறுவன் அருகில் வந்து அந்த சிறிய தாயாரைக் கண்டிருக்கலாம். ஏதோ ஒன்று அவனுக்கு மனதில்பட்டது. அவன், “நான் இந்த துருத்தியில் இங்கே கொஞ்சம் குளிர்ந்த தண்ணீரை வைத்திருக்கிறேன். நீங்கள் அதை குடிக்க விரும்புகிறீர்களா?” என்றான். தாயாகவிருந்தவள் அந்த குடிதண்ணீரைப் பருக, சிறு குடும்பமே அவனுக்கு நன்றி கூறினது.

111. ஒருக்கால் அது அன்றிரவு அந்த குன்றின் மேல் அங்கே படுத்துக் கொண்டிருந்த ஆடு மேய்ப்பவர்களில் ஒருவனாய் இருக்கலாம். அங்கே கீழே தொழுவத்திலோ ஒரு சிறு குழந்தை அழுது கொண்டிருந்தது. ஓ, அப்பொழுதோ, உலகத்தில், அவருக்கு இடமே இல்லா திருந்தது. யாருக்குமே அவர் தேவைப் படவில்லை. ஆனால் அதே சமயத்தில் குன்றின் மீது இருந்த ஒரு மேய்ப்ப னிடத்தில் தேவ தூதர்கள் வந்திறங்கி, “இன்று கிறிஸ்து எனும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக் கிறார்” என்று முதல் கிறிஸ்மஸ் பாடலை பாடத் துவங்கினர். அது வெளிப்படுத்தப் பட்டது.

112. அதுவே இந்த உலகத்தில் உள்ள எவரும் அந்த பொட்டலத்தில் என்ன உள்ளது என்பதை எப்போதுமே அறிந்து கொள்வதற்கான வழியாய் உள்ளது. அது

உங்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது. நீங்களே அது ஒரு அது ஒரு மூட மதாபிமானம் என்று கூறி, அதை புறக்கணித்து விடுவீர்கள். ஆனால் நீங்கள் வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ளும் போது, நீங்கள் அதற்காக தேடுவீர்கள். அப்பொழுது நீங்களே திறந்து பார்ப்பீர்கள். நீங்கள் அவரை உள்ளே அனுமதிக்கும்படி வாசலைத் திறக்க ஆயத்தமாகிற போது தேவன் உள்ளே வந்து, உங்களோடே போஜனம் பண்ணுவார். நீங்கள் அவரோடே இருப்பீர்கள். அந்த சிறு பொட்டலம் உங்களுடைய இருதயத்தை தட்டுகிறது. அது முதலான ஒன்றும், மகத்தான ஒன்றும், எப்போதும் கொடுக்கப்பட்டதிலேயே மகத்தான கிறிஸ்மஸ் வெகுமதியாய் உள்ளது. அந்த சிறு பொட்டலம் மனிதனுடைய இருதயத்தைத் தட்டி, "நான் உள்ளே வந்து போஜனம் பண்ணுவேன்" என்கிறது. அது உங்களுக்கு


வெளிப்படுத்தப் படுகின்ற வரையிலும் நீங்கள் அதை ஒருபோதும் அறிந்து கொள் ளவே மாட்டீர்கள். அது உங்களுக்கே வெளிப்படுத்தப் படுகின்றபோது, அப்பொ ழுது நீங்கள் அதற்காக தேடச் செல்வீர்கள்.

113. அது ஜீவனாய் உள்ளது என்பதை நீங்கள் காணும்போது, அது மட்டுமே ஜீவ வழியாய் உள்ளது என்பதை காணும் போது, உங்களுடைய சபையானது உலர்ந் ததாயும், மரித்ததாயுமிருக்கும் போது, ஒரு போதகரோடு உங்களுடைய - உங்களு டைய கரங்குலுக்குதலை செய்கிறதை நீங்கள் காணும்போது அல்லது ஒரு உப்புத்தெளித்தலை நீங்கள் காணும்போது, அதனோடு செய்ய வேண்டியது ஒன்று மேயில்லை. அப்பொழுதே நீங்கள் அலசி ஆராயச் செல்வீர்கள்.

114. நீங்கள் படுக்கையின் மேல் படுத்து மரித்துக் கொண்டிருக்கும் பொழுது

மருத்துவர், “உங்களுக்காக ஒன்றுமே விடப்பட்டிருக்கவில்லை. நீங்கள் ஒரு சில நிமிடங்களில் மரித்து விடுவீர்கள்” என்று கூறுகிறபோது, அப்பொழுது நீங்கள் அந்த பொட்டலத்திற்குள்ளே நோக்கிப் பார்க்க விரும்புவீர்கள். இன்றிரவே அதற்குள்ளே நோக்கிப் பாருங்கள், ஏனெனில் அப் பொழுது அது உங்களிடத்திலிருந்து திருப் பப்படும். வேதம், “இப்பொழுது நீங்கள் இருக்கின்றதைப் போன்ற, உங்களுடைய சுக ஜீவிய நாட்களில் நீங்கள் என்னை புறக்கணித்துத் தள்ளினால், ஆபத்து வருகின்றபோது, நானும் உங்களைப் பார்த்து நகைப்பேன்” என்று கூறியுள்ளது. எனவே நீங்கள் இன்றிரவே அந்தப் பொட் டலத்தை அலசி ஆராய்ந்து பார்ப்பது மேலானது.

# நியாயத்தீர்ப்பில் காத்திருக்கும் ஆச்சரியங்கள்



# செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2

91. சமீபத்தில், நியாயத்தீர்ப்பை குறித்து பிரசங்கித்தேன்.

"நியாயத்தீர்ப்பில் காத்திருக்கும் ஆச்சரியங்கள்'' என்று தலைப்பில் பிரசங்கித்தேன்.

அங்கே ஒரு மது காய்ச்சுபவனைப் பார்க்க ஆச்சரியமாயிருக்காது, அவன் தான் போகப் போவதை அறிந்தேயிருக்கிறான்.

நிச்சயமாக, பொய்யனும், விபச்சாரக்காரனும் அங்கே போவதைப் பற்றி எள்ளளவும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

ஆனால் காணப்போகும் ஆச்சரியம் என்னவெனில், ஏமாற்றம் என்னவெனில், தாங்கள் பரலோகத்திற்கு போகப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறவர்கள், நியாயத்தீர்ப்பில் நிற்கப் போவதுதான் ஆச்சரியமாயிருக்கப் போகிறது.

நல்லது, கொஞ்சம் பொறுங்கள், என் தாயார் இந்த சபையைச் சேர்ந்தவர், என் தந்தையும் இந்த சபையைச் சேர்ந்தவர் தான், எனது தாத்தா, எனது பாட்டி ஆகியோரும் அப்படித்தான். என் வாழ்நாள் முழுவதும் நான் அதின் உறுப்பினராக இருக்கிறேன்'' என்று கூறும் நபர்கள் அவர்கள்.

92. ''நான் உங்களை அறியேன், அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்.''



# “வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை”



# செய்தி: 61-01-08 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #3

134. இங்கே நின்றிருந்து, இந்த நித்திய வார்த்தையானது, எழும்பி, ஒவ்வொரு புயலையும் அசைத்ததை காணுங்கள்! வேதாகமங்களை அவர்கள் எரிக்க முயன்ற பொழுது, அதேவிதமாக அது அப்புயலுக் கெதிராக அசைந்தது. ஏனெனில் வசனம் கூறுகிறது. 'வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று.

135. இப்பொழுது சிக்காகோவுக்கு அருகில் உள்ள ஒரு ஊரில் ஒரு ஆலயத்தில் உள்ள பிரசங்க பீடத்தின் மேல் ஒரு வேதாகமமானது வைக்கப்பட்டுள் ளது. முதல் உலகப்போருக்கு முன், ஒரு

மிஷனரியானவர்.... ஒருமனிதன் இரட்சிக் கப்பட்டான். அப்பொழுது அம்மனிதன் அம்மிஷனரிக்கு ஒரு வேதாகமத்தை அளிக்க விரும்பினான், அப்பொழுது அவன், ''நான் உமக்கு இந்த வேதா கமத்தை அளிக்க இயலாதவனாயிருக்கி றேன், என் தாயார் எனக்கு இதைக் கொடுத்தார்கள். நான் வீடு திரும்பும் பொழுது, உமக்கு ஒரு வேதாகமத்தை அனுப்பித் தருவேன்'' என்று கூறினான்.

136. அவன் கடலில் பிரயாணம் செய்த பொழுது, ஒரு ஜெர்மானிய நீர்மூழ்கி யானது இவன் பயணம் செய்த கப்பலை குண்டு போட்டு தகர்த்தது. அக்கப்பலின் உடைந்த ஒரு துண்டைக் கூட அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகள் கழித்து, கடற்கரைக்கருகில் ஒரு பெட்டி மிதந்து கொண்டிருப்பதைக்

கண்டார்கள். மூழ்கிப்போன ஏதோ ஒன்றுதான் அங்கே மிதந்து கொண்டிருப் பதாக சிலர் எண்ணினர். எனவே அவர்கள் அப்பெட்டியை எடுத்து அதைத் திறந்து பார்த்தார்கள். அதனுள் அத்தாக்குதலுக்கு தப்பி மீதியாயிருந்த அந்த மிஷனரிக்கு தான் அனுப்பித்தருவதாக வாக்களித்த அந்த வேதாகமம் மட்டுமே இருந்தது. அதை அவருக்கு அனுப்புவதற்காக வைத்திருந்தார். அது சிக்காகோவுக்கு அருகில் ஒரு மெதோடிஸ்ட் சபையில் உள்ள ஒரு பிரசங்க பீடத்தில் இன்றைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது. 'வானமும் பூமி யும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"

137. 1937ம் ஆண்டில் இவ்வூரில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது, மண்ணால் போடப்பட்ட தரையுள்ள இங்கேயிருந்த

இந்த பழைய சபைக்கட்டிடமானது வெள்ள நீரினால் நிறைந்திருந்தபடியால், ஒரு இழுவைப் படகில் நாம் கட்டிடத்தின் கூரை வரையிலும் செல்லக்கூடிய அள வுக்கு இருந்தது. அன்றிரவில் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவிட்டு எனது வேதாகமத்தை திறந்தபடி பிரசங்க பீடத்தில் வைத்துவிட்டு நான் வீடு திரும்பிய பிறகு, வெள்ளம் ஏற்பட்டு, மேலே வரைக்கிலும் பெருகியது.

138. நான் வெள்ளம் வரும் என்று முன்னுரைத்திருந்தேன். "இங்கே இந்த ஸ்ப்ரிங் தெருவில் 22 அடி அளக்கப் படுவதைக் கண்டேன்'' என்று நான் கூறினேன்.

139. ஜிம் வைஸ்ஹார்ட் என்ற வயதான சகோதரனும் ஏனையோரும் அதைக் குறித்து என்னை கேலி செய்தனர்.

சகோதரன் ஜார்ஜ் அவர்களே, அது உங்களுக்கு ஞாபகமிருகிறதா? அவர், "பில்லி, 1884ல் ஸ்ப்ரிங் தெருவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் ஆறு அங்குல உயரத்திற்குத்தான் தண்ணீர் பெருகியது'' என்று என்னிடம் கூறினார்.

140. ஆகாயத்திலிருந்து ஒரு மனிதன் இறங்கி வருவதையும், அவன் ஒரு அளவுகோலை எடுத்து, இருபத்திரண்டு அடி உயரத்தை 'ஸ்பிரிங் தெருவில் அளந்தான் என்பதை நான் கண்டேன்'' என்று நான் அவரிடம் கூறினேன்.

"நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு விட்டீர்கள்'' என்று அவர் பதிலளித்தார்.

“நான் உணர்ச்சி வசப்படவில்லை. அது **கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்**

என்பதாக இருக்கிறது'' என்று நான் கூறினேன்.

141. ஸ்ப்ரிங் தெருவில் வெள்ளம் எவ்வளவு அடி உயரத்துக்கு இருந்தது என்பதை அவர்களிடம் கேளுங்கள். மிகவும் சரியாக இருபத்திரண்டு அடி உயரத்துக்கு அது இருந்தது.

142. அன்றிரவில் நான் பிரசங்கித்து விட்டு வைத்துவிட்டு வந்த அந்த பழைய வேதாகமம் நான் வைத்துவிட்டு வந்த அதே இடத்தில்... மழை பெய்ய ஆரம்பித்து, வெள்ளம் பெருக் கெடுத்தது, இப்பழைய சபையில் இருந்த இருக்கை கள், கட்டிடத்தின் கூரை வரையிலும் வெள்ளத்தில் உயர கொண்டு போகப் பட்டது, உள்ளே வெள்ள நீர் நிறைந் திருந்து எல்லாவற்றையும் மேலே கொண்டுபோய்விட்டது; பிரசங்க பீட

மானது மேலே போய்விட்டது. பிறகு அவைகள் கீழே வந்துவிட்டன, ஒவ்வொரு இருக்கையும் அதன் அதன் இடத்தில் திரும்பி வந்து இறங்கி நின்றுவிட்டது. வெள்ள நீரினால் மேலே கொண்டு போகப்பட்ட வேதாகமமும் திரும்ப அதனிடத்திறகு வந்து எந்த அதிகாரத்தில் திறந்து வைக்கப்பட்டு அங்கே விடப்பட்டு இருந்ததோ, அதே அதிகாரம் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. இவ்வளவு தண்ணீர் பெருகியிருந்துங்கூட, இவ்வாறு நிகழ்ந்தது.

143. "வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை"

144. அவ்வேதாகமம் அந்த உப்புத் தண்ணீரில் இரண்டு ஆண்டுகள் மிதந்து கொண்டிருந்தும்கூட, அதன் எழுத்துக்கள்

கொஞ்சமும் அழிந்து போகாமல் எப்படி யாய் இருந்தது பாருங்கள்! தேவனுடைய வார்த்தைகள் உண்மையாயிருக்கின்றன. ஆமென்.

145. அதன்பிறகு சகோதரன் ஜிம் ஹைஸ்ஹார்ட் அவர்கள் அதைப்பற்றி திருப்தியடைந்தவராக இருந்தார். அவருக்கு அடிக்கடி தனது கையில் வலி உண்டாகும். அவருக்கு எழுபத்தைந்து வயதாகிய போது, அவருக்கு வாதநோய் ஏற்பட்டது. அவருக்கு ஏதாவது ஒரு தொந்தரவு சரீரத்தில் ஏற்பட்டுக் கொண் டேயிருந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் சரீரத்தில் அவருக்கு நோவு ஏற்பட்டால், அவர் ஓடிப்போய் வேதாகமத்தை எடுத்து அந்த இடத்தில் வைத்துக்கொள்வார், இன்னொரு இடத்தில் வேதனை ஏற் பட்டால் அந்த இடத்திலும் இன்னொரு

வேதாகமத்தை எடுத்து வைத்துக்கொள் வார். ஒருநாள் நான் அவரைப் பார்க்கப் போன பொழுது, அவர்மேல் எங்கும் வேதாகமங்களினால் மூடியிருந்தது, அதி னால் அவரைப் பார்க்கவே முடியவில்லை. அவர் சரீர முழுவதும் வலியுள்ள பாகங் கள் பூராவும் வேதாகமங்களைக் கொண்டு மூடிக்கொண்டிருந்தார். அவர், “இது தேவ னுடைய வாக்குத்தத்தம் ஆக இருக்கிறது'' என்று கூறினார். அவ்வாறுதான் அது இருக்கிறது.

146. "வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'



அப்பொழுது நான் எனக்குள், “தேவனே, அது சரிதான், என் கரத்தை நீர் பிடித்துக் கொள்ளாமல் ஒரு அடி கூட எடுத்து வைக்க விரும்பவில்லை; ஏனெனில் எப்பொழுது என் அடிகள் சறுக்கும் என்பதை நான் அறியேன்‘‘ என்று சிந்தித்தேன்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2

11. இப்பொழுது இப்புத்தாண்டை துவங்குவதற்கு நீங்கள் யாவரும் சரியான உணர்வோடு இருக்கிறீர்களா? இப் புத்தாண்டில் சரியான சீரோடு இங்கிருந்து வெளியே செல்லுங்கள். கர்த்தரை சேவிக்கிறவர்களாய் நாம் இவ்வாண்டை சரியாக ஆரம்பிக்க போகிறோம். எத்தனை பேர் காலையில் எழுந்து, பழைய ஆண்டுக்காகவும் அது உங்களுக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்த தாயிருந்தது என்பதற்காகவும் நன்றி செலுத்தி, பழை யனவற்றை மறந்துவிடும்படி அவரைக் கேட்டுக் கொண்டீர்கள்? எனவே நாம் நமது படுக்கையண்டையில், எழுந்திருக் கும் போது அதைச் செய்கிறோம்.

அதன்பிறகு நாம் மேசைக்கு வந்து, வழக்கமான குடும்ப பலிபீடமாக அது இருக்கிறது; அங்கே குடும்பமாக மேசை யண்டை கூடி வந்து ஜெபிக்கப்படுகிறது.

12. எனவே நாம் எப்பொழுதும் படுக்கைக்கு செல்லும் முன்னர், இரவில் ஜெபிக்கிறதை ஒரு பழக்கமாக கொள்ள முயற்சிக்கிறோம். நான் மனந்திரும்பியது முதல் அதை என் பழக்கமாகக் கொண் டிருக்கிறேன். அதிகாலையில் நான் எழுந்து, அது இருளாயிருந்தாலும் பனி மூட்டமாயிருந்தாலும், நான் எங்கே போகிறேன் என்பதே தெரியாமல் நடந்து செல்வேன். ஆனால் நான் அவரிடம் என் கரத்தைப் பிடித்து, அந்த நாள் முழுவதும் நடத்தும்படி கேட்பேன்.

13. முன்பு இந்த தெருவுக்கு அப்பால் நாங்கள் குடியிருந்த போது, நான்

இளைஞனும், பில்லி பாலுக்கு மூன்று அல்லது நான்கு வயது இருக்கும், அந்நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு இரவில் அவன் குடிக்கத் தண்ணீர் கேட்டான். ஒரு வாளியில் குவளையுடன் தண்ணீர் சமையலறையில் இருந்தது. நாள் முழுவதும் நான் கடினமாக வேலை பார்த்து விட்டு வந்து, பாதி இராத்திரி வரையிலும் பிரசங்கம் செய்திருந்தேன். அவன், ''அப்பா, எனக்கு தண்ணீர் வேண்டும்'' என்றான்.

14. "பில்லி, சமையலறைக்குள் போ, தண்ணீர் அந்த சிறிய மேசையின் மேல் இருக்கிறது, எடுத்துக்குடி" என்றேன் நான்.

15. அவன் எழுந்து, கண்களை கசக்கிக் கொண்டு, அங்கே பார்த்தான். ''அப்பா, எனக்குப் போக பயமாயிருக்கிறது'' என்று கூறினான்.

16. "ஓடிப்போய் தண்ணீர் குடித்துக் கொள், அப்பா மிகவும் களைப்பாயிருக்கி றேன், அன்பே" என்று கூறினேன். அந்த ஜன்னல் வரைக்கும் உள்ள தூரம் தான், மிகவும் சமீபத்தில் இருந்தது.

17. "ஆனால் போக எனக்குப் பயமா யிருக்கிறது, அப்பா'' என்றான் அவன். பாருங்கள்.

18. நான் சிறுவனோடு எழுந்தேன். அவன் கையை நீட்டி என் கையைப் பிடித்துக் கொண்டான். அது நன்றாக இருந்தது. நாங்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் நடந்திருப்போம். அங்கே அவன் தரை விரிப்பின்மேல் இடறிக்கொண்டான், அதினால் அவன் சற்று சறுக்கிவிட்டான். மேடா மெழுகைக் கொண்டு தரையைப் பூசி விட்டு, அதன் மேல் லினோலியத்தை விரித்திருந்தாள். அது எப்படியிருக்கும்

என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் அவனது கையைப் பிடித்திருந்தேன். அப்பொழுது அவனும் என் கையைப் பிடித்து இறுக்கி இன்னும் அதிகமாக பற்றிக் கொண்டான். அங்கே அப்பொழுது நான் ஒரு கணம் நின்றேன். அப்பொழுது நான் எனக்குள், "தேவனே, அது சரிதான், என் கரத்தை நீர் பிடித்துக் கொள்ளாமல் ஒரு அடி கூட எடுத்து வைக்க விரும்பவில்லை; ஏனெனில் எப்பொழுது என் அடிகள் சறுக்கும் என்பதை நான் அறியேன்'' என்று சிந்தித்தேன். பார்த்தீர்களா? "உம்முடைய பலத்த வல்லமையான கரமானது என் கரத்தை இறுகப் பிடித்துக் கொள்கிறது என்பதை நான் உணர முடிகிற வரையிலும், எனது அப்படிப்பட்ட வேளைகளில் நீர் என்னைப் பிடித்துக் கொள்வீர் என்பதை நான் அறிவேன்'' என்றேன். பாருங்கள்.

19. எனவே, என் கரத்தை அவர் கரத்தினுள் வைத்துக் கொள்ளும் பழக் கத்தை பழக்கமாகக் கொண்டிருக்க நான் முயலுகிறேன். சில வேளைகளில் என் பார்வைக்கே நகைப்புக்கிடமானதாக, அர்த்தமற்றதாக இருக்கக்கூடிய காரியங் களை நான் செய்திருக்கிறேன், அவ்வித மான காரியங்கள் மானிட சிந்தைக்கு, இயல்பானதாக இராமல் அதற்கு முரணாக இருப்பதாகத் தோன்றும்; ஆனால் அப்படியே நடக்கட்டும் என்று அதை விட்டு விடுவோமானால், சரியாக செய்யக் கூடிய காரியம் அது ஒன்றே என்பதை நான் பின்பு கண்டுபிடித்திருக்கிறேன்.

20. சரியாக இல்லை என்பதாக பார்வைக்கு தோன்றும் காரியங்களைச் செய்யும்படி தேவன் உங்களை நடத்துவா ரெனில், எங்கோ அது சரியாகத்தான் இருக்கும் என்பதை நீங்கள் காண்பீர்கள்;

ஏனெனில் எவ்விதம் வழிநடத்துவது என்பதை அவர் அறிவார். எனவே, நம்முடைய சகலத்திற்கும் போதுமான கிருபையுள்ளவர் அவரே என்பதையும், நமக்கு அவசியமானவையாவும், நமக்காக அக்கறை கொள்கிறதும் யாவும் அவரிலே உள்ளது என்றும் நாம் கண்டு கொண்டோமானால், அவரைத்தவிர மற்ற எல்லாவற்றையும் நாம் தள்ளிவிட்டு, மாறாதவரான அவரது கரத்தை பற்றிக் கொள்வோமாக.

21. இங்கே நாம் ஒரு பாடலை பாடுவது வழக்கம். நீண்ட காலமாக அதைப்பாட நான் கேட்டிருக்கவில்லை. ஆனால் என்னால் பாட முடியாது ..... இங்கே அந்நியர்கள் யாரும் நம்மோடு இல்லை என்று நான் நினைக்கிறேன். எனவே தான் நான் இந்த சிறு பாடல்களை பாட முயற்சிக்கிறேன், ஏனெனில் நான்

அவைகளை நேசிக்கிறேன். ஜீன், இதை ஒலிநாடாவில் பதிவாக விடுவீரெனில், பொதுவிலே கேட்கும்படி போகட்டும். இந்த ஒரு சிறிய பாடலை பாடுவது வழக்கம்.


*காலமானது விரைவான சூழல் மாற்றங் களைக் கொண்டது,*

*பூமியில் ஒன்றும் அசையாதவைகள் அல்ல, அசையாதவைகளே நிலைக்கும்*

*நித்தியமானவைகளின் மேல் நம்பிக்கை கொள்ளுவீர்,*

*தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்வீர்*





# ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன்றுண்டு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-12-11M பத்து கன்னிகைகள்

அங்கே உங்களில் சிலர், இக்காலையில் ஒன்றில் மேசையருகே அமர்ந்திருப்பீர்கள். அதில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படு வார், இன்னொருவர் கைவிடப்படுவார். முடிவாக நீங்கள் அதிசயப்படுவீர்கள், 'இது என்ன விஷயம்'' என்று. ஒரு மோட்டார் வாகனத்தை உங்கள் மனைவியோடோ அல்லது உங்கள் கணவனோடோ பேசிக் கொண்டே ஓட்டிக் கொண்டே சென்று கொண்டிருக்கக் கூடும், நீங்கள் கேட்பதற்கு அவர்கள் பதிலளிக்க மாட்டார்கள், ஏனெனில் அவர்கள் திடீரென அங்கு இருக்க மாட்டார்கள். கல்லறைக்கு ஓடிச் செல்வீர்கள், சில கல்லறைகள் திறந்திருக் கும், வேறு சில இன்னமும் அப்படி

மூடியே கிடக்கும். “மரணமடைந்த மற்ற வர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியு மளவும் உயிரடையவில்லை''. அப்படியே ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அது அப்பொழுது முடிவடைந்திருக்கும்.

141. அது ஒரு இரகசிய வருகையாக இருக்கும், அது எப்பொழுது சம்பவிக்கப் போகிறது என்பதை ஒருவரும் அறியமாட் டார்கள். நாம் ஆயத்தமாகவும் விழிப்புட னும் இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக் கிறோம். எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம். ஆனால் அது என்னவாயிருந் தாலும் சரி, கடந்த காலத்தில் மரித்தவர் களுக்கு நாம் முந்திக் கொள்வதில்லை. இயேசு தோன்றியதுமே, முழு ஜாமமும் விழித்தெழுகிறது. மரித்தவர்களோ, உயி ரோடிருக்கிறவர்களோ, யாராயிருந்தாலும் சரி.

142. முதலில், நாம் அவரை சந்திப்பதில்லை. நாம் ஒருவரையொருவர் முதலில் சந்திப்போம். வேதம் கூறுகிறது எபேசியர் 5ம் அதிகாரம் - "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்த வர்களுக்கு முந்திக்கொள்வதில்லை''. தங்களுடைய சாட்சிகளை தங்களுடய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த விலையேறப் பெற்ற மக்கள். 'நித்திரையடைந்தவர்களை நாம் முந்திக் கொள்வதில்லை. ஏனெனில்... எக்காளம் தொனிக்கும்'' அப்பொழுது ஒன்று சம்பவிக்கும். "சுவிசேஷத்தின் ஏதோ ஒன்று தொனிக்கும்." அது தானே அவருடைய வருகையை அறிவித்தலாகும். "கிறிதுவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள்.'' பின்பு உயிரோடிருக்கும் காத்திருக்கும் நாமும் மருரூபமடைவோம். ஒரு க்ஷணத்தில் ஒரு

இமைப்பொழுதில், நாம் மறுரூபமடை வோம், சுருக்கங்கள் மறைந்து போகும். நரை மயிர் நீங்கிவிடும், ஒரு மாற்றம் ஏற்படுவதை நாம் நன்கு உணருவோம். நாம் நின்று கொண்டிருக்கையில், நமக்குப் பிரியமானவர்களை முதலில் நாம் சந்திப்போம். "அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார்கள், அதோ அங்கே என்று பிரிய சிநேகிதன் இருக்கிறான். ஓ, அல்லேலூயா, நாம் ஆயத்தமாக இருக்கிறோம்'' என்று சொல்லுவோம். மரித்துயிர்த்து அவர்க ளோடுகூட நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை சந்திப்போம் என்று வேத வாக்கியம் கூறுகிறது. இதுவே வருகையின் ஒழுங்காகும்.

143. ஓ, எனக்கு வயது சென்ற தந்தையை காண்பது எவ்வளவு நன்றா யிருக்கும்! ஓ, என்னே! விசுவாசத்தோடு

மண்ணுக்குள் சென்ற நமக்கு மிகவும் பிரியமானவர்களை சந்திப்பது எவ்வளவு அருமையாயிருக்கும்! தேவனுடைய இனிமையைப் பாருங்கள். அவரை முதலில் நாம் சந்திப்போமானால், “அம்மா அங்கே இருக்கிறார்களா, அம்மா கடைசி யாக அதை அடைந்தார்களா? அவர்க ளுக்கு மிகவும் உறுதியாக பிரசங்கித்தோம், நாம் முயற்சி செய்தோம்; அவர்கள் இங்கு இருக்கிறார்களா? ஜா அங்கிள் இங்கு இருக்கிறார்களா? சகோதரன் இன்னார் இங்கு இருக்கிறாரா?'' என்றெல்லாம் நாம் கேட்போம் என்று அவர் அறிந்தே இருக்கிறார். “கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மை நேசிக்கிறோம், ஆனால்...'' என்று கேட்போம். முதலாவ தாக நாம் ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறோம். ஓ, ஓ, ஓ. அவர்கள் அங்கு இருக்கிறார்களா என்று நாம் வியக்கத்

தேவையில்லை. நாம் யாவரும் அங்கே இருக்கிறோம்.

144. அவர்கள், 'ஆமென், மகிமையும், ஞானமும், கனமும், வல்லமையும், பெலனும் உண்டாவதாக'' என்று கூறியது ஆச்சரியமல்ல.

145. இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்றி விட்டு, தரையிலே வணக்கமாய் விழுந்து, அவர்கள் யாவரும் தரையிலே விழுந்து கிடந்து, அவரைத் தொழுது கொண்டனர்.

146. இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோகத்தில் போய் விடமாட்டோம்; நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

147. ரெபெக்காள் விரைவாக தீர்மானித்தாள். தான் ஈசாக்கை சந்திக்க எலியேசருடன் ஒட்டகத்தின் மேலேறி செல்வோம் என்று அவள் தீர்மானித்தபொழுது, தனக்கு கணவனாக ஆகப்போகிற ஈசாக்கின் முகத்தை அவள் இதற்கு முன் பார்த்ததேயில்லை. ஆயினும் தேவன் அவளை அவனிடம் நடத்திக்கொண்டு இருந்தார். மாலையின் குளிர்ச்சியான வேளையில், ஈசாக்கு வயல்வெளிகளில் போவதற்காக போய்க் கொண்டிருந்தான். அது மாலை வேளையாயிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தின் மேலேறி வந்து கொண்டிருக்கிறாள். எலியேசர் அவளிடம், “இதோ அவர் வருகிறார்'' என்று கூறினான். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி, தன் முகத்தின்மேல் இருந்த முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டாள்.

அவள் இதற்குமுன் அவனைப் பார்த்ததே கிடையாது. அறிந்திருக்கவில்லை... அவன் தான் அவளுடைய கணவன் என்று, அவனை இதற்கு முன் பார்த்ததே கிடை யாது. அவள் அவனை விசுவாசத்தினால் சந்திக்க போவதாக இருந்தாள். (அவர் எப்படி தோற்றமளிப்பார் என்பதை நான் அறியேன், ஆனால், ஓ, அவரை நான் சந்திக்கும் பொழுது!) அவனை அங்கே வெளிகளில் அவள் சந்தித்த பொழுது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. அவனும் அவளை இதற்கு முன்பு கண்டதில்லை. அவன் கண்டபோது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. இங்கே இவர்கள் ஒருவரையொருவர் வெளி களிலே சந்திக்க வருகிறார்கள். அவன் அவளைத் தன் தந்தையின் இராஜ் யத்தினுள் கொண்டு வந்து அவளை விவாகம் செய்து கொண்டாள்.

148. அதேவிதமாகத்தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும். ஓ, அது எப்பேர்ப்பட்ட உறவாக இருக்கும், கண்டதும் காதலாகத் தான் இருக்கும். நாம் பூமியின் வளை யங்களிலே நின்று கொண்டிருக்கும் பொழுது, அந்த மீட்பின் பாடல்களைப் பாடும்போது, அது எப்படியாயிருக்கும்! ஓ, என்னே! எப்படியாய், நாம் நமக்கு அவர் அளித்த நம்மை மீட்கும் கிருபையைக் குறித்து, அவரைப்பாடித் துதிப்போம். பூமியின் வட்டத்தை, தலை வணங்கிய வாறு, தூதர்கள் சுற்றி சூழ்ந்து கொண் டிருக்கையில், நாம் என்ன பேசிக்கொண் டிருக்கிறோம் என்பதைப் பற்றி அறியாம லிருப்பார்கள். அத்தூதர்கள் இழக்கப்பட வில்லை. இரட்சிக்கப்படுவது என்றால்

என்ன என்பதை அத்தூதர்கள் அறிய மாட்டார்கள். நாம் தான் இழக்கப்பட்டோம். நாம் தான் அவ்வாறிருந்தோம். அப்பொழுது, எவ்வளவு பயங்கரமான காரியம் நமக்கு முன்பாக இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம், அவரோ நம்மை சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலும் இருந்து தம்முடைய இரத்தத்தினாலே மீட்டார். ஓ, அது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி கொண்டாடுதலான நாளாயிருக்கும்.

149. நான் அப்பாடலை விரும்புகிறேன்.

*ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன்றுண்டு.*

*இனிமையாய், இனிமையாய், ஈற்றிலே*

*நான் வான்வெளிக்கப்பால் உள்ள வீட்டிலே*

*உன்னை சந்தித்து வாழ்த்துவேன்.*

*அழிவுள்ளோர் காதுகளில் கேட்டிராத பேரின்ப கீதம் பாடுவோம்.*

*அது மகிமையாயிருக்கும், நான் அறி விக்கிறேன்,*

*தேவனுடைய சொந்தக் குமாரன் நடத்திச் செல்லுவார்*

*ஆகாயத்தில் நாம் அவரை சந்திக் கையில்.*

*முட்செடியருகே நின்ற மோசேயையும்*

*வீர தாவீதையும் அவன் கவணையும்*

*சொப்பனம் காணும் யோசேப்பையும்*

*குறித்து அறிந்துள்ளீர்.*

*தானியேலும் சிங்கக் கெபியையும் பற்றி எப்போதும் பாடுகிறோம்.*

*ஓ, இன்னும் இவ்விதமான அநேகர் வேதத்திலுண்டு.*

*அவர்கள் யாவரையும் காண நான் வாஞ்சிக்கிறேன்*

*என்று அறிவிக்கிறேன்* (அது சரிதான்)

*அவர்களை சந்திப்பது எவ்வளவாய் ஆனந்தமாயிருக்கும்*

*அது ஆகாயத்தில் சந்திக்கும்போது நடக்கும்*

(அந்நாளுக்காக காத்திருக்கிறேன்)



நியாயத்தீர்ப்பானது காலங்கள் தோறும் இன்னும் அதிகமதிகமாக கடுமையாகிக் கொண்டே போகிறது. தேவன் தன்னோடு ஒப்புரவாகிட, பாவிகள் தன்னிடம் வரவேண்டுமென்பதற்காக முயற்சித்துக் கொண்டேயிருக்கிறார்; ஆனால் அவரது பொறுமையானது தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருக்க முடியாது, தேவனுடைய பொறுமை முடியப் போகிறது.



செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2, Para 235

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

அவன் வாகனத்தை விட்டு
வெளியேறி, அதன் சாவியையும்
வண்டியிலேயே விட்டு விட்டு,
வண்டியை அங்கேயே நிறுத்தி
விட்டு, நடந்து சென்று விட்டான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-01-08 வெளிப்படுத்ின விசேஷம் 4 அதிகாரம் #3

51. இங்கே சமீபத்தில் லூயிவில்லில் இந்தக் கார்களைத் திருடி, வெகு விரைவாக அவைகளை கென்டக்கியில் ஏதோ ஒரு இடத்தில், எடுத்துச் சென்றுவிடும் ஒரு திருட்டுக் கும்பலைப் பற்றி நீங்கள் யாவரும் கேள்விப்பட்டும், பத்திரிக்கைகளில் அதைப் பற்றி படித்தும் இருக்கிறீர்கள். கென்டக்கியில் ஒரு மோட்டார் வாகனத்தை உரிமை கொண்டாட அதற்கான உரிமைப் பத்திரம் உங்களுக்குத் தேவையில்லை; அதை கென்டக்கியிலேயே உங்களுக்கு தயாரித்துக் கொடுப்பார்கள். ஆகவே, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அதை நீங்கள் எடுத்துக் கொண்டு போய் உரிமைப்பத்திரம் இல்லா

மலேயே விற்றுவிட வேண்டியதுதான். எனவே அவர்கள் இவ்வாறு திருடிக் கொண்டு வந்த விற்கப்பட்ட வாகனங் களை எடுத்து ஓட்டிக்கொண்டுபோய், அவைகளுக்கு வேறு வர்ணம் பூசி, அவைகளைத் கொண்டு வந்து விற்று விடுவார்கள். நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம், அவ்வாகனத்திற்கான உரிமைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களுடைய குடியிருப்பின் இலக்கத்தை மட்டும் சொன்னால் போதுமானது. அதைக் கொண்டு அவர்கள் உங்களுக்கு உரிமைக் கான தஸ்தா வேஜைத் தயாரித்து அளித்து விடுவார்கள். இப்படியாக அவர்கள் மோட்டார் வாகனத்தை தெருவிலிருந்து திருடிக்கொண்டு, அதை வெகு வேகமாக ஓட்டிச் சென்று, ஏதாவது ஒரு பணிமனை யில் கொண்டுபோய் நிறுத்தி, அதற்கு வேறு வர்ணம் கொடுத்து, அவ் வண்டியின்

தோற்றத்தை முழுவதுமாக மாற்றி யமைத்து, அதை விற்றுவிடுவார்கள். அமெரிக்காவில் எங்கும் இவ்விதமான மோசடியானது நடைபெற்று கொண்டிருக் கிறது. அது விசேஷமாக கெண்டக்கியில் தான் மிக அதிகமாக நடைபெறுகிறது. அதைப் பற்றிய கட்டுக்கதையை சமீபத்தில் பத்திரிக்கையில் படித்தேன்.

52. பெருந்தன்மையும், நல்ல உள்ள மும் படைத்த, விலையேறப் பெற்ற சகோதரன் ஈவான்ஸ் அவர்களும் அவரது குடும்பத்தினரும் ஜார்ஜியாவிலுள்ள மேகோனிலில் இருந்து மோட்டார் வாக னத்தை ஓட்டிக்கொண்டு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இங்கு சுவிசேஷத் தைக் கேட்பதற்கென்றே வந்துகொண்டிருக் கிறார்கள். ஓ, எவ்வளவாய் அவர்கள் உத்தமமும், உண்மையுமான சிநேகிதரா

யிருக்கிறார்கள்! பிறகு அவர் மில்லருடைய உணவகத்தில் சாப்பிட செல்வதுண்டு.

53. மில்லர் நிறுவனத்திற்காக நான் விளம்பரம் கொடுக்கவில்லை. லூயிவில் கெண்டக்கியின் மிகச்சிறந்த உணவை அவர்கள் விற்கிறார்கள் என்று நான் நிச்சயமாக கருதுகிறேன். தனிப்பட்ட வீடுகளைக் குறித்து நான் ஒப்பிட்டுச் சொல்லவில்லை. வீட்டை விட்டு வெளியே உள்ளவற்றில், எனக்குத் தெரிந்தவரை அங்கு தான் நன்றாக உள்ளது. நானும் அங்கு சாப்பிடுவது உண்டு. நான் எனது குடும்பத்தை வீட்டில் வைத்து உணவளிப்பதைவிட மிக மலிவாக அந்த உணவகத்தில் உணவளிக்க முடியும்.

54. எனவே, அப்பொழுது நான் அங்கே உள்ளே சென்றேன். அதே போல்,

சகோ. ஈவான்ஸ் அவர்களும் சாப்பிடு வதற்காக, தனது மோட்டார் வாகனத்தை வெளியே நிறுத்தி வைத்துவிட்டு, உள்ளே சென்றார். அவர் தானும் தனது குடும்ப முமாக உணவகத்தை விட்டு வெளியே வரும்போது, அங்கே அவரது எல்லாத் துணிமணிகளோடும் அவரது மோட்டார் வாகனமானது காணப்படவில்லை. எல்லாம் போய்விட்டிருந்தது. நம் எல்லா ரையும் போலுள்ளவர்தான் சகோதரன் ஈவான்ஸ் அவர்களும். அவருக்கு அங்கே ஒரு சிறு வியாபாரம்தான் உண்டு, அவர் மோட்டார் வாகனத்தில் வேலை செய் கிறவர். மிக மோசமாக சேதமடைந்த வண்டிகளை வாங்கி, அவைகளை சீர் செய்பவர் அவர். அவர் ஒரு எளிய மனிதர், அவர் தனது பணத்தை, இந்த வகையான சுவிசேஷத்தை அவர் விசுவா சிக்கிறபடியினால், அதைக் கேட்பதற்காக

செலவழித்துக் கொண்டு வந்து கொண்டு இருக்கிறார். தேவன்தாமே அவர்களுக்கு, அத்தேசத்தில் உதவியாக இருந்து இச் செய்தியைப் பிரசங்கிப்பதற்காக, எங்கிருந் தாவது ஒரு செய்தியாளனை அனுப்பும்படி நான் ஜெபித்துக்கொண்டு இருக் கிறேன்.

55. அப்பொழுது சகோதரன் ஈவான்ஸ் செய்வதறியாமல் வந்தார். அவர் காவல் துறையினருக்கும் தெரிவித்துவிட்டார். அவர்களாலும் கண்டுபிடிக்கமுடிய வில்லை. எனவே அவரும், அவரோடு சகோ. ஃப்ரெட் அவர்களும் வந்தனர், நாங்கள் அறையில் அமர்ந்து அதைக் குறித்து பேசினோம். அவ்விதமாகத்தான், நாங்கள் என்ன நடக்கிறதென்று அறையில் உட்கார்ந்து பார்த்து, பிறகு தேவனிடத்தில் போவது வழக்கம். எனவே நாங்கள் கர்த்தரிடம் ஜெபித்த பொழுது, அவ்வாக னத்தை எடுத்துக் கொண்டுபோன மனி

தனை சந்தித்து, அவன் எங்கிருந்தாலும் சரி, அவனைத் திருப்பியனுப்பும்படி கேட்டோம்.

56. வழக்கமாக இத்திருடர்கள், வண்டியை வெகுவேகமாக போலீஸ் கைக்கு எட்டாத தூரத்தில், அதாவது பௌலிங் க்ரீன் என்ற பகுதியைத் தாண்டி ஓட்டிச் சென்றுவிடுவர், அதனால் அவர்களால் அதைக் கொண்டுபோய் மறுபடியும் வேறு வர்ணம் பூசி, அதை வேறுமாதிரியாக உருவாக்கிவிடுவார்கள். திருடப் பட்ட இந்த வாகனம் மிகவும் நல்லதொரு வண்டியாகும். அது ஒரு ஸ்டேஷன் வாகன் என்று எண்ணுகிறேன். அப்படித்தானே சகோதரன் ஈவான்ஸ் அவர்களே? ஆம், அது ஒரு ஸ்டேஷன் வாகன்தான்.

57. எனவே, என்ன நடந்தது? நாங்கள் முழங்கால்படியிட்டு ஜெபித்தோம்.

எல்லாம் சரியாக இருக்கிறது என்பதாக கர்த்தர் எங்களுக்கு சாட்சியிட்டார். எனவே, அப்பொழுது கர்த்தருடைய வல்லமையானது எங்களுக்குள் வந்தது. சகோதரன் ஈவான்ஸ் ஒரு குறிப்பிட்ட வழியாக போகும்படியாக நடத்தப்பட்டு புறப்பட்டுச் சென்றார்.

58. வாகனத்தை திருடியவன் அதை நேரே இங்கே ஜெபர்சன் வில்லுக்கே திரும்பக் கொண்டு வந்துவிட்டான். அவ்வாகனமானது லூயிவில்லில் திருடப் பட்டது. திருடியவன் பௌலிங் க்ரீன் வரையிலும் அதைக் கொண்டுபோய் விட்டு, அதை இங்கே திரும்பக்கொண்டு வந்து விட்டு விட்டான். அவன் வாக னத்தை விட்டு வெளியேறி, அதன் சாவியையும் வண்டியிலேயே விட்டு விட்டு, வண்டியை அங்கேயே நிறுத்தி விட்டு, நடந்து சென்று விட்டான்.

ஈவான்ஸ் கண்டு கொள்ள வசதியாக ஜெபர்சன்வில்லிலேயே விட்டுவிட்டு சென்று விட்டான்; லூயிவில்லில் அல்ல. இவ்வளவு தூரம் திரும்ப இங்கே ஜெபர்சன்வில்லுக்கு அவன் வெகுதூரம் ஓட்டிக் கொண்டு வந்துவிட்டு விட்டுப் போய் விட்டான்.

59. பறவைகள் தனக்குக் கீழ்ப்படி யும்படி கர்த்தரால் செய்ய முடியும். மனிதன் அவருக்குக் கீழ்ப்படியும்படி செய்ய அவரால் முடியும்; அவருடைய சத்துரு அவருக்கு கீழ்ப்படியும்படி செய்ய அவரால் இயலும். ஆம், ஐயா. அவர் தேவனாயிருக்கிறார். ஒரு பொருள்கூட இழக்கப்படாமல், பெட்ரோல் டாங்கின் பாதியளவுக்கு பெட்ரோல் நிரப்பியிருந்து, வாகனமானது அங்கே, பௌலிங் க்ரீன் வரைக்கிலும் அத்திருடன் அதை ஓட்டிக் கொண்டு போய் விட்டு, அவனால்

திரும்பக்கொண்டு வந்து நிறுத்தி விடப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அவனிடம், ''வண்டியைத் திருப்பு, வண்டியை ஜெபர்சன்வில்லுக்கு திருப்பி ஓட்டிக் கொண்டுபோ, இன்ன இடத்தில் இன்ன தெருவில் நிறுத்திடுவாயாக, நான் அவனை, வாகனத்தை கண்டு கொள்ளும்படி அந்த இடத்திற்கு அனுப்பப் போகிறேன். இன்ன வழியாக'' என்று கூறியிருக்க வேண்டும். அது சரிதானே சகோ. வெல்ச் அவர்களே? அது சரிதான்.

60. அவர் தேவனாயிருக்கிறார். சகோதரன் ராய்! அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். சகோதரன் ஸ்லாட்டார். அதேவிதமாகத்தான் அவர் செய்கிறார்; உங்களுடைய சிறிய நாயைக்கூட அவர் குணமாக்கினார். அவர் சுகமளிக்கிறார் என்பதை நான் அறிவேன். அவர் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். அவர் இன்னமும்

அற்புதங்களைச் செய்கிறார். அவர் இன்னமும் தேவனாயிருக்கிறார். அப்படியே அவர் செய்வார். எப்பொழுதும் அவர் தேவனாயிருந்தார், அவர் இன்னமும் தேவனாகவே இருப்பார்.

*வீட்டின் கூரையின் மேலும் அவர் தேவனாயிருக்கிறார்*

(அப்பாடலை சபையில் பாடும் சகோதரர் யார்?)

*சமையலறையில் தேவன் இருக்கிறார், பண்ணையில் தேவன் இருக்கிறார்,*

*வாகனத்தில் தேவன் இருக்கிறார், எங்கும் தேவன் இருக்கிறார்;*

*எல்லாவற்றிலும், எங்கும் தேவன் தேவனாக இருக்கிறார்.*




# எனவே கிறிஸ்துவுக்குள் இருக்கும் மனிதனே ஐசுவரியவான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 60-12-18 விளங்காத சத்தம்

118. வீட்டு வாழ்க்கையை நாம் எடுத்துக் கொள்வோம். அதுவும் நிச்சய மற்றதே. நமது ஸ்திரீகளின் நல்லொழுக் கத்துக்கு என்ன நேர்ந்ததென்று எனக்குத் தெரியவில்லை. விவாகரத்து பெருகி வருகின்றது. அது மிகவும் பயங்கரமானது. விவாகரத்து நீதிமன்றங்களில் ஜனநெருக் கம் அதிகமுள்ளது. பையன்களும் பெண் களும் மணம் புரிந்து ஒன்றாக வாழ்ந்து இரண்டு மூன்று குழந்தைகளைப் பெறு கின்றனர். அதன் பிறகு அவர்கள் பிரிந்து போய் வேறொருவனை அல்லது வேறொ ருத்தியை மணம் புரிகின்றனர், மணம் புரிகின்றனர், மணம் புரிகின்றனர். அவர்க ளுடைய குடும்ப நிலை?

119. அன்றொரு நாள் நான் மிகவும் எளிய ஒருவர் வீட்டுக்கு சென்றிருந்தேன்.

அந்த மனிதன், “நான் வருமானத்துக்கு மிஞ்சின செலவு ஏற்படாமல் எப்படி சமாளிக்கப் போகிறோனோ” என்றார்.

120. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அவர் பாடுபட்டு வேலை செய்தார். அவருக்கு மிகவும் உத்தமமான ஒரு மனைவி இருந்தாள். தரையில் அழுக்கு படிந்த முகத்துடன் நான்கு அல்லது ஐந்து பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். நான், “நீர் ஒரு கோடீஸ்வரன்” என்றேன்.

121. அவர், “ஹு நல்லது, சகோ. பிரன்ஹாம். உமது சொற்களை நான் மறுத்துக் கூறமாட்டேன். சகோதரனே, என்னிடம் ஒரு பைசா கூட இல்லை,” என்றார்.

122. நான் அவரிடம், “ஆனால் பணம் வாங்க முடியாத ஒன்றை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இங்குள்ள உங்கள் மனைவிக்கு உடுக்க ஒருக்கால் இரண்டு உடைகள் கூட இல்லாமல் இருக்கலாம்.

அதுவும் வேறு யாரோ அவளுக்கு கொடுத்தது. ஏனெனில் உமக்கு எப்பொழுதாவது ஒரு நாளைக்கு மாத்திரம் வேலை கிடைக்கிறது. ஆனால் அவளைப் பாருங்கள், அவள் எவ்வளவாக உமக்கு உத்தமமுள்ளவளாய் இருக்கிறாள் என்று. இன்றைக்கு வீட்டிற்கு அப்படிப்பட்ட ஒரு மனைவியிடம் வருவதற்கு தங்கள் கடைசி காசையும் செலவழிக்க எத்தனையோ கோடீஸ்வரர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். அவனுடைய மனைவி ஒரு கூட்டம் மனிதருடன் மது அருந்தும் ஸ்தலத்தில் மது அருந்தி, கொஞ்சி விளையாடி, ஆடிப்பாடி, புகைபிடித்து, இரவில் அவர்களுடன் காரில் சென்று கொண்டிருக்கிறாள். இருப்பினும் அவன் அவளை நேசிக்கிறான். அவன் என்ன பெற்றிருக்கிறான் என்பதைப் பாருங்கள். அவனுடைய வாழ்க்கை முழுவதுமே அவளுடன் இணைக்கப்பட்டிருக்கும்போது, அவள்

எப்படி நடந்து கொள்கிறாள் என்பதைப் பாருங்கள்." என்றேன்.

123. அவ்வாறே மனிதரும் ஸ்திரீ களும் செய்கின்றனர். பாருங்கள், அவர்கள் இருவருக்குள்ளே இவ்விஷயத்தில் எவ்விதவித்தியாசமும் இல்லை. எல்லாமே பாவத்தின் தொகுப்பு என்னும் நிலைக்கு இப்பொழுது வந்துவிட்டது. வீட்டில் ஒரு பெண் தன் பிள்ளைகளைப் பேணி வளர்த்து, அதே சமயத்தில் அவளுடைய கணவன் குடித்து வெறித்து, மற்ற பெண் களுடன் சல்லாபம் செய்தால், அவளிடம் கோடிக்கணக்கான டாலர்கள் இருக்கு மானால், அவளுடைய கணவனை சீர் படுத்த அவள் என்ன செய்வாள்? அதற்கு ஒரே ஒரு வழி மாத்திரமேயுண்டு. இயேசு கிறிஸ்துவே அதற்கு பதில், வேறெதுவும் நன்மை செய்யாது. அது முடிவு காலத்தில் உள்ளது. அது கிறிஸ்து, கிறிஸ்து மாத் திரமே.

124. நான் தொடர்ந்து அவரிடம், “மூளை கோளாறுள்ள தங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகளைப் போல் ஆரோக் கியமுள்ளவர்களாய் ஆவதற்கு இன் றைக்கு எத்தனை கோடீஸ்வரர்கள் தங்கள் கடைசி காசையும் செலவழிக்க ஆயத்த மாயிருக்கிறார்கள்?” என்றேன். பாருங் கள்? அவர் என்னையே பார்த்துக் கொண் டிருந்தார்.

125. நான், “பாருங்கள், உங்களுக்கு கொஞ்சம் பீன்ஸும், ஒரு ரொட்டியும் மாத்திரம் இருப்பதாக கூறினீர்கள். இன்று பிற்பகல் நீங்கள் சம்பளம் வாங்கி, உங்கள் பிள்ளைகள் இன்றிரவு உண்பதற்காக ஒரு ரொட்டியும் கொஞ்சம் பீன்ஸும் வாங்கின தாக கூறினீர்கள். உங்களில் யாருக்குமே வயிற்றுக்கோளாறு இல்லை. உங்களால் அதை உண்ண முடிகிறது. ஆனால் எத்தனை கோடிஸ்வரர்கள்...”

126. “ஜான் டி. ராக்ஃபெல்லர் என்ன கூறினார்? அவருக்கு மாத்திரம் ஒரு பாத்திரம் முட்டைகோஸ் தின்ன முடிந்தால், அவர் பத்து லட்சம் டாலர்கள் கொடுப்பதாகக் கூறினார். இன்று காலை நீங்கள் ஜன்னலின் அருகே உட்கார்ந்திருந்ததாகவும் அப்பொழுது குளிர்ந்த காற்று உள்ளே வருவதை நீங்கள் உணர்ந்ததாகவும் என்னிடம் கூறினீர்கள். அவர் மாளிகையில் வசிக்கிறார். பாருங்கள். அவருக்கு மாத்திரம், இப்படி குளிர்ந்த காற்று உள்ளே அடித்து, ஒரு பாத்திரம் முட்டைகோஸ் உண்ண முடியுமானால், அவர் பத்து லட்சம் டாலர்கள் கொடுத்திருப்பார்.”

127. 'தடியைப் பிடித்துக்கொண்டு தெருவில் நடந்து செல்லும் குருடர்கள் தங்கள் பார்வையைப் பெற கடைசி காசையும் செலவழிக்க ஆயத்தமாயிருப்பார்கள். பாருங்கள், உண்மையில் ஐசுவரியமான காரியங்களை நாம் ஐசுவரியம் என்று


அழைப்பவைகளுடன் மதிப்பிட முடி யாது” என்றேன்.

128. சபை அங்கத்தினர்களே, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆகையால் தான், கூர்ந்த கோபுரமுள்ள உங்கள் பெரிய சபை கட்டிடங்களை, பரிசுத்த ஆவியினால் உங்கள் இருதயங்களில் ஊற்றப்பட்டுள்ள தேவனுடைய அன்புடன் மதிப்பிடவே முடியாது என்று இன்று காலை உங்களிடம் கூற முற்படுகிறேன். இவையிரண்டையும் ஒப்பிடமுடியாது! இவை இயற்கைக்கு மேம்பட்டவை. இவர்கள் அந்நிய பாஷைகளில் பேசி, அர்த்தம் உரைத்து, அழுது, சத்தமிட்டு, கூச்சலிடுவதனால், இவர்கள் விசித்திரமானவர்கள் என்று நீங்கள் எண்ணக்கூடும். மற்றெல்லாவற்றை யும் விட இதைப் பெறவே நான் ஆசிக்கிறேன். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் வெது வெதுப்பான குளிர்ந்த நிலையிலுள்ள மக்களை கொண்ட உலகத்திலேயே

மிகப்பெரிய ஆலயத்தில் போதகராயிருந்து ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து கவனமாய் பேசுவதைக் காட்டிலும், தேவனுடைய வல்லமை சந்திக்கும் ஜனங்களைக் கொண்ட ஒரு பாழடைந்த கட்டிடத்தில் போதகரா யிருப்பதையே நான் விரும்புவேன். அப்படிப்பட்ட பெரிய ஆலயங்களில் நீங்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் பிரசங்கம் செய்ய முடியாது. நீங்கள் அங்கு வந்துள்ள நீதிபதிகளை, மருத்துவர்களை, இன்னும் மற்றவர்களை புண்படுத்தாதபடிக்கு உங்கள் வார்த்தையை அளந்து கவனமாய் பேசவேண்டும். ஏனெனில் இவர்கள் சபைக்கு அதிக சந்தா செலுத்துபவர்கள். நிந்தைப்படும் கர்த்தருடைய சிலருடன் என் வழியைத் தெரிந்து கொள்வேன். பாருங்கள்? அதை நீங்கள் மதிப்பிட முடியாது. அப்படி செய்ய ஒரு வழியும் இல்லை.

129. எனவே கிறிஸ்துவுக்குள் இருக்கும் மனிதனே ஐசுவரியவான். உங்களுக்கு நல்ல பார்வை, நல்ல ஆரோக்கியம், நிறைய பணம் இவையெல்லாம் இருந்தும், கிறிஸ்துவற்றவராக இருப்பீர்களானால், நீங்கள் இழக்கப்படுவீர்கள். நீங்கள் நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாயிருப்பதை அறியாமலிருக்கிறீர்கள், பாருங்கள். லவோதிக்கேயா சபையின் காலம் அப்படித்தான் உள்ளது. நீங்கள் தேசத்திலேயே மிகப் பெரிய ஆலயத்தில் அங்கத்தினராயிருக்கலாம், நீங்கள் மிகப்பெரிய ஸ்தாபனத்தை சேர்ந்திருக்கலாம், இருப்பினும் இழந்து போன நிலையில் இருக்கலாம். பாருங்கள்? எனவே கிறிஸ்துவுக்குள் இருக்கும் மனிதனே ஐசுவரியவான். அது உண்மை.





பாவம் மிகவும் எளிதாகவும், பசியை உண்டு பண்ணுவதாகவும், இனிமையாகவும் உள்ளது. அதற்குள் விழுவது மிகவும் எளிது. செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவெனில், அது தோன்றுவதைக் காணும்போதே, அதிலிருந்து விலகியிருத்தலே. திரும்பிப் போய் விடுங்கள். உண்மையான கிறிஸ்தவனாக இருங்கள்!

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும் COD #15



சற்று முன்பு, பிரசங்கத்தின் தொடக்கத்தில் நான் உங்களிடம் என்ன கூறினேன்? தொண்ணூறு மைல் வேகத்தில் ஒரு கார் சாலையின் வழியாக வருவதைக் காண்பீர்களானால், அதன் வழியிலிருந்து விலகுங்கள். அது உண்மை! நீங்கள் அப்படிப்பட்ட ஒரு சிறு மாற்றத்தை ஏதாகிலும் ஒன்றில் காணும்போது, அதிலிருந்து விலகுங்கள். அவ்விதமான தரையில் நீங்கள் இருக்கக் கூடாது. **சாத்தான் உங்களுக்கு முன்பாக ஏதாவதொன்றைக் கொண்டுவந்து, அது உங்கள் ஆத்துமாவை சேதப்படுத்தி உங்களை நரகத்துக்கு அனுப்பி விடும்.** அதிலிருந்து விலகியிருங்கள்! **பொல்லாங்கை கண்டால் அதைப் புறக்கணியுங்கள்.** அது உண்மை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும்

# அதை சாத்தானிடமே தள்ளி விடுகிறேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

ஒருவார காலமாக, சில நிமிடங்களுக்கு ஒரு முறை என் ஜலதோஷத்தை பிசாசுக்குத் திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்குத் தெரியுமா, ஒவ்வொரு முறை அவன் அதை எனக்குத் தந்தபோது, அதை அவனுக்கே திரும்ப அளித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம். அவன்தான் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். பாருங்கள், ஒவ்வொரு முறையும் அவன் அதை எனக்குத் தரும்போது, அதை அவனிடமே தள்ளி விடுகிறேன். அவன் அதை மறுபடியும் கொடுப்பதில் மிகவும் சமர்த்தன் என்று உங்களுக்குத் தெரியும். அதை எப்படி செய்வதென்று அவன் நன்கு அறிந்திருக்கிறான். அன்றிரவு நான் கூறினது போல், முடிவில் நாம் அவனுடைய பொறுமையை போக்கி விடுவோம்.

ஒருமுறை ஒருவனுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, அவன், "நான் சுகமடையவில்லை என்று பிசாசு என்னிடம் கூறினான். நான் பார்த்தபோது, வியாதியின் அறிகுறிகள் அத்தனையும் துவக்கத்தில் இருந்தது போலவே இருந்தன. நான், 'சாத்தானே, நான் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்ன தெரியுமா? அவை என்னை விட்டுச் செல்லும் வரைக்கும், நான் தேவனுடைய மகிமைக்கென்று மும்முரமாக சாட்சி கூறப்போகிறேன். எனவே நீ இருந்து கொண்டு நான் கூறுவதைக் கேட்க விரும் பினால், அப்படியே செய்'" என்றானாம்.


அதுவே உண்மையான விசுவாசம். தேவனுடைய மகிமைக்கென்று சாட்சி கூறுங்கள்! ஏனெனில் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்

படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.” பாருங்கள்? நீங்கள் விசுவாசத்தை கண்கனால் காண முடியாது. அதை நம்புகிறீர்கள் – விசுவாசத்தை.

*விளங்காத சத்தம், டிசம்பர் 18, 1960, பத்தி எண் 1-3*



உங்களுடைய சுகத்தைக் குறித்தோ அல்லது உங்களுடைய இரட்சிப்பைக் குறித்தோ சாட்சி கூறப் பயப்படும் கோழைகளை அவரால் பயன்படுத்த முடியாது; அவர் உன்னைப் பயன்படுத்த முடியாது; நீ ஒன்றுக்கும் உதவாதவன். பாருங்கள்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

நம்மை சோதிப்பதை அவர் நேசிக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?

உங்களுடைய விசுவாசத்தின் கிரியை என்னவாக இருக்கிறது என்பதைக் காண வாஞ்சிக்கிறார். உங்களுக்கு அது தெரியுமா?

நீங்கள் எப்படி செயல்படுகிறீர்கள் என்பதைக் காண வாஞ்சிக்கிறார்.

“ஓ, கர்த்தாவே, நான் உம்மை விசுவாசிக்கிறேன்; நீர் என்னுடைய இரட்சகராக இருக்கிறீர். நீர் சுகமாக்குகிறவர் என்று நான் விசுவாசிக்கிறேன்; நீரே பரிசுத்த ஆவியை அருளிச் செய்கிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன்; எனக்குத் தேவைப்படும் பொருள்களை கொடுக்கிறவர் நீர் என்று விசுவாசிக்கிறேன். அவைகளைக் கொடுக்

கிற தேவன் நீரே” என்று நீங்கள் சொல்லும் போது.

அதன்பிறகு, நீங்கள், உங்களுடைய எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து, நீங்கள் என்ன செய்வீர்கள் என்று தேவ னுக்கு வாக்குக் கொடுக்கும் போது, அவர் உங்களுக்கு சுகத்தை அளிப்பாரானால், அதன் பிறகு அது சம்பவிக்கவில்லையென் றால், ஒரு கோழையைப் போல எங்கோ ஓடுகிறாய்.

தேவன் அதைப் பயன்படுத்த மாட்டார்.

உன்னைப் பயன்படுத்துவதற்கு அவ ருக்கு ஒரு வழியும் இல்லை.

உங்களுக்குப் பதிலளிக்க அவருக்கு ஒரு வழியும் இல்லை, ஏனென்றால், விசு வாசத்தினாலே மாத்திரம் பதிலளிக்கிறவரா யிருக்கிறார்.

பின் சடுதியில் நீங்கள் அங்கிருந்து சென்று விடுகிறீர்கள்.

அவரால் பதிலளிக்க முடியாது.

ஆனால், உண்மையான, நிஜமான விசுவாசம் அங்கு நிலைத்து நின்று, தேவன் இருக்கிறார் என்னும் நிச்சயத்தை உடையதாய் இருக்கும்.

அவர் இருக்கிறார் என்னும் நிச்சயம் உடையவர்களாய் இருங்கள்.

*தேவனைக் குறித்த நிச்சயம் உடையவர்களாயிருங்கள், **59-0125**, பத்தி எண் **46***

---

தேவன் ஒரு கோழையல்ல. உங்களுடைய சுகத்தைக் குறித்தோ அல்லது உங்களுடைய இரட்சிப்பைக் குறித்தோ சாட்சி கூறப் பயப்படும் கோழைகளை

அவரால் பயன்படுத்த முடியாது; அவர் உன்னைப் பயன்படுத்த முடியாது; நீ ஒன்றுக்கும் உதவாதவன். பாருங்கள்?

*பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது போதும், 56-0422, பத்தி எண் E-56*

★★★★★






இந்த புத்தாண்டு தொடக்கத்தில் "எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்" என்று கூறாமல், **"கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக"** என்று கூறுகிறேன், அவர் அப்படி செய்வாரானால், இந்த புத்தாண்டில் அது மாத்திரமே நமது தேவையாயுள்ளது. அவர் அப்படி செய்வாரென நம்புகிறேன்.

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

செய்தி: 62-12-31 போட்டி

# கழுகின் சத்தம்

## ஜனவரி 2, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து